## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## ஒன்பதாம் பத்து

## எட்டாம் திருமொழி - முந்துற
## திருமாலிருஞ்சோலை 1

** முந்துற உரைக்கேன் விரைக் குழல் மடவார் *
கலவியை விடு தடுமாறல் *
அந்தரம் ஏழும் அலைகடல் ஏழும்
ஆய * எம் அடிகள் தம் கோயில் **
சந்தொடு மணியும் அணி மயில் தழையும் *
தழுவி வந்து அருவிகள் நிரந்து *
வந்திழி சாரல் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 1

இண்டையும் புனலும் கொண்டு இடை இன்றி *
எழுமினோ தொழுதும் என்று * இமையோர்
அண்டரும் பரவ அரவணைத் துயின்ற *
சுடர் முடிக் கடவுள் தம் கோயில் **
விண்டலர் தூளி வேய் வளர் புறவில் *
விரை மலர்க் குறிஞ்சியின் நறுந்தேன் *
வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 2

பிணி வளர் ஆக்கை நீங்க நின்றேத்தப் *
பெருநிலம் அருளில் முன் அருளி *
அணி வளர் குறளாய் அகல் இடம் முழுதும் *
அளந்த எம் அடிகள் தம் கோயில் **
கணி வளர் வேங்கை நெடு நிலம் அதனில் *
குறவர் தம் கவண் இடைத் துரந்த *
மணி வளர் சாரல் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 3

சூர்மயில் ஆய பேய் முலை சுவைத்துச் *
சுடு சரம் அடு சிலைத் துரந்து *
நீர்மை இலாத தாடகை மாள *
நினைந்தவர் மனம் கொண்ட கோயில் **
கார் மலி வேங்கை கோங்கலர் புறவில் *
கடிமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன் *
வார் புனல் சூழ் தண்மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 4

வணங்கலில் அரக்கன் செருக் களத்து அவிய *
மணிமுடி ஒருபதும் புரள *
அணங்கெழுந்து அவன் தன் கவந்தம் நின்றாட *
அமர் செய்த அடிகள் தம் கோயில் **
பிணங்கலில் நெடுவேய் நுதி முகம் கிழிப்பப் *
பிரசம் வந்து இழிதரப் * பெருந்தேன்
மணங்கமழ் சாரல் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 5

விடங்கலந்து அமர்ந்த அரவணைத் துயின்று *
விளங்கனிக்கு இளங்கன்று விசிறி *
குடங்கலந்தாடிக் குரவை முன் கோத்த *
கூத்த எம் அடிகள் தம் கோயில் **
தடங்கடல் முகந்து விசும்பிடைப் பிளிறத் *
தடவரைக் களிறென்று முனிந்து *
மடங்கல் நின்று அதிரும் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 6

தேனுகன் ஆவி போய் உக அங்கோர் *
செழுந்திரள் பனங்கனி உதிர *
தான் உகந்து எறிந்த தடங்கடல் வண்ணர் *
எண்ணி முன் இடங்கொண்ட கோயில் **
வானகச் சோலை மரதகச் சாயல் *
மாமணிக் கல் அதர் நிறைந்து *
மானுகர் சாரல் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 7

புத மிகு விசும்பில் புணரி சென்று அணவப் *
பொருகடல் அரவணைத் துயின்று *
பத மிகு பரியின் மிகு சினம் தவிர்த்த *
பனி முகில் வண்ணர் தம் கோயில் **
கத மிகு சினத்த கட தடக் களிற்றின் *
கவுள் வழிக் களி வண்டு பருக *
மத மிகு சாரல் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 8

புந்தியில் சமணர் புத்தர் என்றிவர்கள் *
ஒத்தன பேசவும் உகந்திட்டு *
எந்தை பெம்மானார் இமையவர் தலைவர் *
எண்ணி முன் இடங்கொண்ட கோயில் **
சந்தனப் பொழிலின் தாழ் சினை நீழல் *
தாழ் வரை மகளிர்கள் நாளும் *
மந்திரத்து இறைஞ்சும் மாலிருஞ்சோலை *
வணங்குதும் வா மட நெஞ்சே! 9

** வண்டமர் சாரல் மாலிருஞ்சோலை *
மாமணி வண்ணரை வணங்கும் *
தொண்டரைப் பரவும் சுடர் ஒளி நெடு வேல் *
சூழ் வயல் ஆலி நன்னாடன் **
கண்டல் நல்வேலி மங்கையர் தலைவன் *
கலியன் வாய் ஒலி செய்த பனுவல் *
கொண்டிவை பாடும் தவம் உடையார்கள் *
ஆள்வர் இக்குரைகடல் உலகே 10

**அடிவரவு:** முந்துற இண்டை பிணி சூர்மையில் வணங்கலில் விடம் தேனுகன் புதமிகு புந்தி வண்டமர் மூவர்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**